# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.03/2022 நாள் : 03.03.2022**

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் மென்பொருள் பராமரிப்புப் பணிகள்
04.03.2022 முதல் 06.03.2022 வரை நடைபெற உள்ளதால்
வரி செலுத்துவோர்கள் மற்றும் நுகர்வோர்கள்
வரி மற்றும் கட்டணங்களை செலுத்த இயலாது**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

**சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் வரி மற்றும் கட்டணங்கள் பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள், தலைமை அலுவலகத்தில் வசூல் மையம் மற்றும் இணையதளம் வாயிலாக வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.**

**சென்னைக் குடிநீர் வாரியத்தில் மென்பொருள் பராமரிப்புப் பணிகள்** 4.3.2022 **வெள்ளிக்கிழமை,** 5.3.2022 **சனிக்கிழமை மற்றும்** 6.3.2022 **ஞாயிற்றுக்கிழமை ஆகிய மூன்று நாட்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் வரி செலுத்துவோர் மற்றும் நுகர்வோர்கள் தங்களது வரி மற்றும் கட்டணங்களை தலைமை அலுவலகத்திலோ, பகுதி அலுவலகங்களிலோ, பணிமனை அலுவலகங்களிலோ அல்லது இணைய வழியிலோ செலுத்த இயலாது என்பதை இதன் வாயிலாக சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துக் கொள்கிறது.**

**வரும்** 7.3.2022 **திங்கள்கிழமை முதல் வழக்கம்போல் நுகர்வோர்கள் தங்களது குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை பகுதி அலுவலகங்கள், பணிமனை அலுவலகங்கள், தலைமை அலுவலகத்தில் வசூல் மையம் மற்றும் இணையதளம் வாயிலாக செலுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது.**

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்